**DEPOSITION OF WITNESS**

**In the Court of Judicial Magistrate No.II, Mettur**

**Case No : C.C.130/2025**

**Prosecution witness : அ.சா. 1** **Date : 13.06.2025**

| | |
|---|---|
| **Name : காசி** | **Caste :** |
| **Father's Name :** | **Calling :** |
| **Village :** | **Religion :** |
| **Taluk :** | **Age :** |

**(Accused present. )**

சாட்சி ஆஜர். சத்தியபிரமாணம் செய்து வைக்கப்பட்டு, முதல் விசாரணை செய்ய அனுமதிக்கப்பட்டது.
(சாட்சி திறந்த நீதிமன்றத்தில் சம்மந்தப்பட்ட காவல்துறை அதிகாரியால் அடையாளம் காட்டப்பட்டு விசாரணை செய்யப்பட்டார்)

**முதல் விசாரணை**

1) நான் காட்டுவளவில் குடியிருந்து மரம் வெட்டும் வேலை செய்கிறேன். மதியழகன் என்பவரை எனக்கு தெரியும். தங்கவேலு என்பவரை தெரியும். கடந்த 04.01.2025ம் தேதி மாலை 4 மணி சுமாருக்கு கருமலைக்கூடல் காவல் நிலையத்தில் சண்டை நடந்ததாக சொன்னார்கள். வாய்தகராறு ஏற்பட்டது. மதியழகன் தான் தங்கவேலுவை அடித்தார். வேறொன்றும் தெரியாது. போலீசார் என்னை விசாரித்தனர்.

**சாட்சியம் அரசு தரப்பிற்கு ஆதரவாக சாட்சியம் அளிக்காத நிலையில், பிறழ் சாட்சியாக பாவிக்கக் கோரி, அரசு தரப்பில் கேட்கப்பட்டு அனுமதிக்கப்பட்டு சாட்சி பிறழ் சாட்சி என அறிவிக்கப்பட்டு அரசு தரப்பில் குறுக்கு விசாரணை செய்யப்படுகிறார்.**

**அரசு தரப்பில் குறுக்கு விசாரணை–**

2) மாதேஷ்வரி அவர்களுக்கு குழந்தை இல்லாததால் மதியழகனை விட்டுவிட்டு அவரது அம்மா வீட்டிற்கு சென்றுவிட்டார் என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. குணவதி என்ற பெண்ணை மதியழகன் இரண்டாவதாக திருமணம் செய்து கொண்டார் என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. அவர்களுக்கு

சாருலதா என்ற பெண் உள்ளார் என்றால் ஆமாம். குணவதி கோபித்துக் கொண்டு அவருடைய தாயார் வீட்டிற்கு சென்று பூச்சி மருந்து குடித்து தற்கொலை செய்து கொண்டார் என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. குணவதி இறப்பதற்கு முன்பு வரை தங்கவேல் குடும்பத்துடன் நல்ல உறவு இருந்தது என்றால் எனக்கு தெரியாது. கடந்த 04.01.2025ம் தேதி சாருலதாவை திருமணம் செய்து கொள்ள தங்கவேலு என்பவர் மிரட்டியதாக புகார் கொடுக்கப்பட்டது என்றால் அது பற்றி எனக்கு தெரியாது.

3) மேட்டூர் நீதிபதி அவர்களிடம் மனு கொடுக்கப்பட்டு சேலம் மாவட்ட குழந்தைகள் நல அமைப்பினருக்கு மனு அனுப்பப்பட்டு விசாரணை நடைப்பெற்றது என்றால் தெரியாது. கடந்த 02.02.2025ம் தேதி மாலை 4 மணிக்கு நானும் யமுனா, முனுசாமி ஆகியோர் மதியழகன் வீட்டு முன்பாக வந்த போது தங்கவேல் மதியழகனை பற்றி கெட்ட வார்த்தையால் பேசினார் என்றால் எனக்கு தெரியாது.

4) தங்கவேல் கையால் மதியழகன் வாய் மீது குத்தி காயம் ஏற்படுத்தினார் என்றால் அவ்வாறு இல்லை. பிறகு இடுப்பில் எட்டி உதைத்தார்கள் என்றால் இல்லை. சாருலதாவை யமுனா என்பவர் தலை முடியை பிடித்து சுவற்றில் முட்டி காலால் வயிற்றில் எட்டி உதைத்தார் என்றால் இல்லை. யமுனா, காலால் மாதேஷ்வரியின் வயிற்றில் எட்டி உதைத்து தள்ளிய போது மாதேஷ்வரி கீழே விழுந்து கன்னத்தில் காயம் ஏற்பட்டது என்றால் இல்லை. யமுனா மாதேஷ்வரியின் முதுகில் காலால் எட்டி உதைத்தார் என்றால் இல்லை. மதியழகனுக்கு தோள்பட்டையில் காயமும், சாருலதாவிற்கு தலையில் காயமும், மாதேஷ்வரிக்கு முதுகில் காயமும் ஏற்பட்டது என்றால் இல்லை. பிறகு கொல்லாமல் விடமாட்டேன் என்று மிரட்டிச்சென்றனர் என்றால் இல்லை. சம்பவத்தை நேரில் பார்த்து விட்டு தற்பொழுது எதிரிக்கு சாதகமாக பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை– இல்லை.

ஒம்/– தே.மயில்சாமி
குற்றவியல் நீதித்துறை நடுவர் எண்.2
மேட்டூர்.

**DEPOSITION OF WITNESS**

**In the Court of Judicial Magistrate No.II, Mettur**

**Case No : C.C. 130/2025**

**Prosecution witness : அ.சா. 2** **Date : 13.06.2025**

| | |
|---|---|
| **Name : சின்னுசாமி** | **Caste :** |
| **Father's Name :** | **Calling :** |
| **Village :** | **Religion :** |
| **Taluk :** | **Age :** |

**(Accused present. )**

சாட்சி ஆஜர். சத்தியபிரமாணம் செய்து வைக்கப்பட்டு, முதல் விசாரணை செய்ய அனுமதிக்கப்பட்டது.
(சாட்சி திறந்த நீதிமன்றத்தில் சம்மந்தப்பட்ட காவல்துறை அதிகாரியால் அடையாளம் காட்டப்பட்டு விசாரணை செய்யப்பட்டார்)

**முதல் விசாரணை**

1) நான் குள்ளமுடையனூரில் குடியிருந்து பெயிண்ட் அடிக்கும் வேலை செய்கிறேன். மதியழகன் என்பவரை எனக்கு தெரியும். தங்கவேலு என்பவரை தெரியும். கடந்த 2025ம் வருடத்தில் மாலை 4 மணி சுமாருக்கு காவல் நிலையத்தில் சண்டை நடந்ததாக சொன்னார்கள். வேறொன்றும் தெரியாது. போலீசார் என்னை விசாரித்தனர்.

**சாட்சியம் அரசு தரப்பிற்கு ஆதரவாக சாட்சியம் அளிக்காத நிலையில், பிறழ் சாட்சியாக பாவிக்கக் கோரி, அரசு தரப்பில் கேட்கப்பட்டு அனுமதிக்கப்பட்டு சாட்சி பிறழ் சாட்சி என அறிவிக்கப்பட்டு அரசு தரப்பில் குறுக்கு விசாரணை செய்யப்படுகிறார்.**

**அரசு தரப்பில் குறுக்கு விசாரணை—**

2) மாதேஷ்வரி அவர்களுக்கு குழந்தை இல்லாததால் மதியழகனை விட்டுவிட்டு அவரது அம்மா வீட்டிற்கு சென்றுவிட்டார் என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. குணவதி என்ற பெண்ணை மதியழகன் இரண்டாவதாக திருமணம் செய்து கொண்டார் என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. அவர்களுக்கு சாருலதா என்ற பெண் உள்ளார் என்றால் ஆமாம். குணவதி கோபித்துக் கொண்டு அவருடைய தாயார் வீட்டிற்கு சென்று பூச்சி மருந்து குடித்து

தற்கொலை செய்து கொண்டார் என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. குணவதி இறப்பதற்கு முன்பு வரை தங்கவேல் குடும்பத்துடன் நல்ல உறவு இருந்தது என்றால் எனக்கு தெரியாது. கடந்த 04.01.2025ம் தேதி சாருலதாவை திருமணம் செய்து கொள்ள தங்கவேலு என்பவர் மிரட்டியதாக புகார் கொடுக்கப்பட்டது என்றால் அது பற்றி எனக்கு தெரியாது.

3) மேட்டூர் நீதிபதி அவர்களிடம் மனு கொடுக்கப்பட்டு சேலம் மாவட்ட குழந்தைகள் நல அமைப்பினருக்கு மனு அனுப்பப்பட்டு விசாரணை நடைப்பெற்றது என்றால் தெரியாது. கடந்த 02.02.2025ம் தேதி மாலை 4 மணிக்கு நானும் யமுனா, முனுசாமி ஆகியோர் மதியழகன் வீட்டு முன்பாக வந்த போது தங்கவேல் மதியழகனை பற்றி கெட்ட வார்த்தையால் பேசினார் என்றால் எனக்கு தெரியாது.

4) தங்கவேல் கையால் மதியழகன் வாய் மீது குத்தி காயம் ஏற்படுத்தினார் என்றால் அவ்வாறு இல்லை. பிறகு இடுப்பில் எட்டி உதைத்தார்கள் என்றால் இல்லை. சாருலதாவை யமுனா என்பவர் தலை முடியை பிடித்து சுவற்றில் முட்டி காலால் வயிற்றில் எட்டி உதைத்தார் என்றால் இல்லை. யமுனா, காலால் மாதேஷ்வரியின் வயிற்றில் எட்டி உதைத்து தள்ளிய போது மாதேஷ்வரி கீழே விழுந்து கன்னத்தில் காயம் ஏற்பட்டது என்றால் இல்லை. யமுனா மாதேஷ்வரியின் முதுகில் காலால் எட்டி உதைத்தார் என்றால் இல்லை. மதியழகனுக்கு தோள்பட்டையில் காயமும், சாருலதாவிற்கு தலையில் காயமும், மாதேஷ்வரிக்கு முதுகில் காயமும் ஏற்பட்டது என்றால் இல்லை. பிறகு கொல்லாமல் விடமாட்டேன் என்று மிரட்டிச்சென்றனர் என்றால் இல்லை. சம்பவத்தை நேரில் பார்த்து விட்டு தற்பொழுது எதிரிக்கு சாதகமாக பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை– இல்லை.

ஒம்/– தே.மயில்சாமி

குற்றவியல் நீதித்துறை நடுவர் எண்.2

மேட்டூர்.

**DEPOSITION OF WITNESS**

**In the Court of Judicial Magistrate No.II, Mettur**

**Case No : C.C. 130/2025**

**Prosecution witness : அ.சா. 3** **Date : 13.06.2025**

| | |
|---|---|
| **Name : ஆண்டியப்பன்** | **Caste :** |
| **Father's Name :** | **Calling :** |
| **Village :** | **Religion :** |
| **Taluk :** | **Age :** |

**(Accused present. )**

சாட்சி ஆஜர். சத்தியபிரமாணம் செய்து வைக்கப்பட்டு, முதல் விசாரணை செய்ய அனுமதிக்கப்பட்டது.
(சாட்சி திறந்த நீதிமன்றத்தில் சம்மந்தப்பட்ட காவல்துறை அதிகாரியால் அடையாளம் காட்டப்பட்டு விசாரணை செய்யப்பட்டார்)

**முதல் விசாரணை**

1) நான் பூரல்கோட்டையில் குடியிருந்து கூலி வேலை செய்கிறேன். மதியழகன் என்பவரை எனக்கு தெரியும். தங்கவேலு என்பவரை தெரியும். கடந்த 2025ம் வருடத்தில் மாலை 4 மணி சுமாருக்கு நான் ஆடு மேய்த்துக் கொண்டிருந்த போது உதவி ஆய்வாளர் என்னிடம் கையொப்பம் வாங்கினார். வேறொன்றும் தெரியாது. என்னிடம் காட்டப்படும் பார்வை மகஜரில் உள்ள 1வது கையெழுத்து என்னுடையது தான். கையெழுத்து மட்டும் **அ.சா.ஆ.1** ஆகும். அதில் உள்ள சங்கதிகள் எனக்கு தெரியாது. போலீசார் என்னை விசாரித்தனர்.

**சாட்சியம் அரசு தரப்பிற்கு ஆதரவாக சாட்சியம் அளிக்காத நிலையில், பிறழ் சாட்சியாக பாவிக்கக் கோரி, அரசு தரப்பில் கேட்கப்பட்டு அனுமதிக்கப்பட்டு சாட்சி பிறழ் சாட்சி என அறிவிக்கப்பட்டு அரசு தரப்பில் குறுக்கு விசாரணை செய்யப்படுகிறார்.**

**அரசு தரப்பில் குறுக்கு விசாரணை–**

2) மாதேஷ்வரி அவர்களுக்கு குழந்தை இல்லாததால் மதியழகனை விட்டுவிட்டு அவரது அம்மா வீட்டிற்கு சென்றுவிட்டார் என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. குணவதி என்ற பெண்ணை மதியழகன் இரண்டாவதாக திருமணம்

செய்து கொண்டார் என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. அவர்களுக்கு சாருலதா என்ற பெண் உள்ளார் என்றால் ஆமாம். குணவதி கோபித்துக் கொண்டு அவருடைய தாயார் வீட்டிற்கு சென்று பூச்சி மருந்து குடித்து தற்கொலை செய்து கொண்டார் என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. குணவதி இறப்பதற்கு முன்பு வரை தங்கவேல் குடும்பத்துடன் நல்ல உறவு இருந்தது என்றால் எனக்கு தெரியாது. கடந்த 04.01.2025ம் தேதி சாருலதாவை திருமணம் செய்து கொள்ள தங்கவேலு என்பவர் மிரட்டியதாக புகார் கொடுக்கப்பட்டது என்றால் அது பற்றி எனக்கு தெரியாது.

3) மேட்டூர் நீதிபதி அவர்களிடம் மனு கொடுக்கப்பட்டு சேலம் மாவட்ட குழந்தைகள் நல அமைப்பினருக்கு மனு அனுப்பப்பட்டு விசாரணை நடைபெற்றது என்றால் தெரியாது. கடந்த 02.02.2025ம் தேதி மாலை 4 மணிக்கு நானும் யமுனா, முனுசாமி ஆகியோர் மதியழகன் வீட்டு முன்பாக வந்த போது தங்கவேல் மதியழகனை பற்றி கெட்ட வார்த்தையால் பேசினார் என்றால் எனக்கு தெரியாது.

4) தங்கவேல் கையால் மதியழகன் வாய் மீது குத்தி காயம் ஏற்படுத்தினார் என்றால் அவ்வாறு இல்லை. பிறகு இடுப்பில் எட்டி உதைத்தார்கள் என்றால் இல்லை. சாருலதாவை யமுனா என்பவர் தலை முடியை பிடித்து சுவற்றில் முட்டி காலால் வயிற்றில் எட்டி உதைத்தார் என்றால் இல்லை. யமுனா, காலால் மாதேஷ்வரியின் வயிற்றில் எட்டி உதைத்து தள்ளிய போது மாதேஷ்வரி கீழே விழுந்து கன்னத்தில் காயம் ஏற்பட்டது என்றால் இல்லை. யமுனா மாதேஷ்வரியின் முதுகில் காலால் எட்டி உதைத்தார் என்றால் இல்லை. மதியழகனுக்கு தோள்பட்டையில் காயமும், சாருலதாவிற்கு தலையில் காயமும், மாதேஷ்வரிக்கு முதுகில் காயமும் ஏற்பட்டது என்றால் இல்லை. பிறகு கொல்லாமல் விடமாட்டேன் என்று மிரட்டிச்சென்றனர் என்றால் இல்லை. சம்பவத்தை நேரில் பார்த்து விட்டு தற்பொழுது எதிரிக்கு சாதகமாக பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

5) கடந்த 04.02.2025 ம் தேதி காலை 8 மணிக்கு நான் மற்றும் பிரசாந்த் இருவரும் நின்று கொண்டு இருந்த போது காவல் துறையினர் வரைந்த வரைபடத்திற்கு மகஜர் சாட்சியாக இருக்க கேட்டுக்கொண்டதன் பேரில் சாட்சியாக கையொப்பம் செய்தேனா என்றால் இல்லை,

6) சம்பவ இடமான கரட்டுப்பட்டி பனங்காடு வாதி மதியழகன் வீட்டு முன்பாக வரைந்த வரைபடத்திற்கு சாட்சியாக இருந்து விட்டு தற்போது எதிரியை இந்த வழக்கிலிருந்து காப்பாற்ற உண்மைக்கு மாறாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை –இல்லை

ஒம்/– தே.மயில்சாமி

குற்றவியல் நீதித்துறை நடுவர் எண்.2

மேட்டூர்.

**DEPOSITION OF WITNESS**

**In the Court of Judicial Magistrate No.II, Mettur**

**Case No : C.C. 130/2025**

**Prosecution witness : அ.சா. 4** **Date : 13.06.2025**

| | |
|---|---|
| **Name : சுரேந்தர்** | **Caste :** |
| **Father's Name :** | **Calling :** |
| **Village :** | **Religion :** |
| **Taluk :** | **Age :** |

**(Accused present. )**

சாட்சி ஆஜர். சத்தியபிரமாணம் செய்து வைக்கப்பட்டு, முதல் விசாரணை செய்ய அனுமதிக்கப்பட்டது.
(சாட்சி திறந்த நீதிமன்றத்தில் சம்மந்தப்பட்ட காவல்துறை அதிகாரியால் அடையாளம் காட்டப்பட்டு விசாரணை செய்யப்பட்டார்)

**முதல் விசாரணை**

1) நான் தற்போது மேட்டூர் அரசு மருத்துவமனையில் முதுநிலை உதவி மருத்துவராக பணிபுரிந்து வருகிறேன். கடந்த 02.02.2025ம் தேதியன்று மாலை 05.55 மணியளவில் மேட்டூர் அரசு மருத்துவமனையில் பணியில் இருந்தபோது, திரு.மாதேஷ்வரி வயது 54, க/பெ மதியழகன் என்பவரை 108 ஆம்புலன்ஸ் மூலமாக சிசிச்சைக்காக அழைத்துவந்தார்.

2) அவர் என்னிடம் கடந்த 02.02.2025 –ம் தேதி மாலை 4 மணிளவில் அடையாளம் தெரிந்த ஒரு நபர் தன்னை கையால் தாக்கி காயம் ஏற்பட்டதாக கூறினார். அவர் சுயநினைவுடன் இருந்தார். அவருக்கு ஏற்பட்ட காயங்கள் 1) 3x3 cm வலது கண்புருவத்தில் ரத்தகட்டு காணப்பட்டது. மேலும் அவருக்கு சிகிச்சை அளித்து உள்நோயாளி பிரிவில் அனுமதித்து சிகிச்சை அளிக்கப்பட்டது. மேலும் அவருக்கு ஏற்பட்ட காயங்கள் சொற்பகாயங்கள் என்றுதான் சான்றளிக்கப்பட்டது. **மேற்படி விபத்து பதிவேடு அ.சா.ஆ.2.**

3) கடந்த 02.02.2025ம் தேதியன்று மாலை 06.00 மணியளவில் மேட்டூர் அரசு மருத்துவமனையில் பணியில் இருந்தபோது, மைனர் சாருலதா வயது 15, த/பெ மதியழகன் என்பவரை 108 ஆம்புலன்ஸ் மூலமாக சிசிச்சைக்காக அழைத்துவந்தார்.

4) அவர் என்னிடம் கடந்த 02.02.2025 –ம் தேதி மாலை 4 மணிளவில் அடையாளம் தெரிந்த மூன்று நபர் தன்னை கட்டையால் அடித்து காயம் ஏற்பட்டதாக கூறினார். அவர் சுயநினைவுடன் இருந்தார். வெளிப்புற காயம் ஏதுமில்லை. அவருக்கு ஏற்பட்ட காயங்கள் 1) வலது தோள்பட்டையில் வலி இருந்ததாக சொன்னார். மேலும் அவருக்கு சிகிச்சை அளித்து உள்நோயாளி பிரிவில் அனுமதித்து சிகிச்சை அளிக்கப்பட்டது. மேலும் அவருக்கு ஏற்பட்ட காயங்கள் சொற்பகாயங்கள் என்றுதான் சான்றளிக்கப்பட்டது. **மேற்படி விபத்து பதிவேடு அ.சா.ஆ.3.**

5) கடந்த 02.02.2025ம் தேதியன்று மாலை 06.00 மணியளவில் மேட்டூர் அரசு மருத்துவமனையில் பணியில் இருந்தபோது, திரு.மதியழகன் வயது 53, த/பெ சின்னன் என்பவரை 108 ஆம்புலன்ஸ் மூலமாக சிசிச்சைக்காக அழைத்துவந்தார். அவர் என்னிடம் கடந்த 02.02.2025 –ம் தேதி மாலை 4 மணிளவில் அடையாளம் தெரிந்த மூன்று நபர் தன்னை கட்டையால் அடித்து காயம் ஏற்பட்டதாக கூறினார். அவர் சுயநினைவுடன் இருந்தார். 1) சிராய்ப்பு காயம் 2x2செ.மீ அளவில் வலது தோள்பட்டையில் காணப்பட்டது. 2) சிராய்ப்பு காயம் 3 x 3 cm வலது கால் முட்டியில் காணப்பட்டது. மேலும் அவருக்கு சிகிச்சை அளித்து உள்நோயாளி பிரிவில் அனுமதித்து சிகிச்சை அளிக்கப்பட்டது. மேலும் அவருக்கு ஏற்பட்ட காயங்கள் சொற்பகாயங்கள் என்றுதான் சான்றளிக்கப்பட்டது. மேற்படி **விபத்து பதிவேடு அ.சா.ஆ.4.** போலிசார் என்னை விசாரித்தனர்.

**<u>எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை–</u>**

6) பொதுவாக ஒரு பொருளால் அடித்தால் தான் ரத்த கட்டு ஏற்படும் என்றால் ஆமாம். கையால் அடித்ததாக கூறினார். அதற்கான காயத்தை கூறவில்லை என்றால் ஆமாம். சாருலதா வலி ஏற்பட்டதாக மட்டும் தான் சொல்லியுள்ளார். கட்டையால் அடித்ததற்கான வெளிக்காயங்கள் ஏதுமில்லை என்றால் ஆமாம். பொதுவாக கட்டையால் அடித்தால் வீக்க காயம் ஏற்படும். மதியழகனுக்கு வீக்க காயம் இல்லை என்றால் ஆமாம். கீழே விழும் போது பொருள் பட்டு மேற்படி மாதேஷ்வரிக்கும், மதியழகனுக்கும் ஏற்பட்ட

காயம் போல் காயம் ஏற்பட வாய்ப்புள்ளது என்றால் ஆமாம். சாருலதா பாசாங்காக வலி இருப்பதாக சொல்லலாம் என்றால் ஆமாம்.

மறுவிசாரணை இல்லை.

ஒம்/– தே.மயில்சாமி

குற்றவியல் நீதித்துறை நடுவர் எண்.2

மேட்டூர்.